

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ஆய்வாளர் எச்.இ.அனீஸ் பாத்திமா அவர்கள் தொகுத்துள்ள ”என் உயிரினும் மேலான இசுலாமிய உடன்பிறப்பே! எனும் நூலை வெளியிட கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அதுபோது, துணைப் பொதுச்செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாநில சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் ஆகியோர் உடனிருந்தனர்.

### ‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் – எழுத்தாளர்

# ப.திருமாவேலன் புதல்வி டாக்டர் ரே.தி.அமிர்தா - டாக்டர் பா.ரபிந்திரன் மணவிழா!


## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை! உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

**சென்னை, செப்.7-**

**‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் ப.திருமாவேலன் புதல்வி மணவிழா இன்று (செப்.7) சென்னை திருவான்மியூர் ராமச் சந்திரா கன்வென்ஷன் அரங்கில் நடைபெறுகிறது. மணவிழா வரவேற்பு நேற்று (செப்.6) மாலை நடைபெற்றது.**

**இம்மண விழா பற்றிய விவரம் வருமாறு:-**

புலவர் மு.படிக்கராமு - ப.முத்து லக்குமி, சு.கிருஷ்ணன் - கி.அழகம்மாள் ஆகியோரின் பேத்தியும், ‘கலைஞர் தொலைக் காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் ப.திருமாவேலன் - ரேணுகா திருமாவேலன் இணையரின் புதல்வியுமான டாக்டர் ரே.தி.அமிர்தாவுக்கும் - கா.சுந்தரம் - சு. லட்சுமி, இரா.பாண்டியராஜன் -



பா.இராணி அம்மாள் ஆகியோரின் பேரனும், டாக்டர் சு.பாலசுப்பிரமணியன் - சுதா பாலசுப்பிரமணியன் இணையரின் புதல்வருமான டாக்டர் பா.ரபிந்திரனுக்கும் மணவிழா இன்று 7.9.2026 - திங்கள்கிழமை காலை 9.15 மணியளவில் சென்னை திருவான்மியூர் ராமச்சந்திராகன் வென்ஷன் அரங்கில் நடைபெறுகிறது.

இம்மண விழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணவிழாவிற்கு முன்னிலை வகிக்கின்றார்.

புலவர் மு.படிக்கராமு திருக்குறள் நெறி நிகழ்த்துகிறார்.

**மணவிழா வரவேற்பு!**

முன்னதாக - மணவிழா வரவேற்பு நேற்று (6.9.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை நடைபெற்றது. இம்மண விழா வரவேற்பில் கழக முன்னணியினர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊடகத் துறையினர், பல்வேறு துறைகளின் முன்னணிப் பெருமக்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில மகளிர் அணி துணைச் செயலாளர்

# ஷானு ஹனீஃப் தலைமையில் 50-க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



சென்னை, செப்.7-

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஷானு ஹனீஃப் அவர்கள் தலைமையில் 50க்கும் மேற்பட்ட மகளிர் அணி, இளைஞர் அணி நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (05.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், விடுதலைச் சிறுத்தை கள் கட்சியைச் சேர்ந்த மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஷானுஹனீஃப் அவர்கள், தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் அனிதா சுகுமாரன், செங்கல்பட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் ஹாரூன், ஷாரூக் மகளிர் நிர்வாகி களான மும்தாஜ்பேகம், சகானா பாத்திமா, ஷானுபானு, ஷர்மிலி பாத்திமா, சுமயா பாத்திமா, ஹாஜிரா பானு, நூர்ஜகான், செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கிளை நிர்வாகிகள் காதர், தன்வீர், அன்வர், மாவட்ட நிர்வாகிகள் நாசர், ராஜாமுகமது, காஞ்சிபுரம் கிளை நிர்வாகி கள், திருவள்ளூர் மாவட்ட பொன்னேரி காதர் தலைமையில் 10 பேர்,

ஈரோடு மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் சாபிராபானு, திருநெல் வேலி மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணியைச் சேர்ந்த வழக்கறிஞர் சசிசுலைமான், சென்னை வடக்கு மாவட்ட நிர்வாகி கொருக்குபேட்டை உமர் அலி, தமிழக மக்கள் ஜனநாயக கட்சி, சென்னை வடக்கு மாவட்டம், கொருக்குபேட்டையைச் சேர்ந்த கொருக்குப்பேட்டை அலி, திருமதி ஜன்னத், ரங்கா ராவ், முஸ்தபா, கரீம், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த அஸ்கர், அப்துல்காதர், மோசஸ், சலீம், சர்மிளி, ஷெரின்பர்கானா, குளோரியா, பிரியங்கா, செய்யது பாஷா, எம். கிருபாகரன், முஷ்டாக் அகமது, மஹ்மூத், முகமது ரிஸ்வான், அப்துல்ரகுமான், மீம்ஜி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாநில சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் ஆகியோர் உடனிருந்தனர்.